பாதுகாவலன்
PATHUKAVALAN

மலர்: 118 இதழ்: 01. 10-01-1992 ( ஜன. 10 — ஜன. 24 ) இலங்கையின் ஒரே தமிழ்க் கத்தோலிக்க வார ஏடு. விலை ரூபா 3-50

## தூதுக்குழு

சமாதானத்துக்கான முயற்சியில் ஈடுபடும் நோக்குடன் கத்தோலிக்க திருச்சபையின் தூதுக்குழு ஒன்று யாழ் வரும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறது. கண்டி, குருநாகல், மட்டுநகர் ஆயர்கள், ஏழு துறவற சபைகளின் தலைவர்கள் அடங்கிய குழுவினர் வடபகுதிக்கு வருவதற்குத் தேவையான அனுமதியை பெறுவதில் இப்போது முனைப்பாக செயல்பட்டு வருகின்றனர்.

### இலங்கை துறவற சபை சிரேஷ்டர்கள் பேரவையின் புதிய தலைவராக அருட்திரு அலெக்சாண்டர் S. S. S

# சமூக மேம்பாட்டிற்கு முக்கிய பங்காற்றுகிற

# படித்த, நடுத்தர வர்க்கத்தினரை கைவிடாதீர்

ஏழைகளுக்காகப் பணிபுரிய முனைப்புடன் செயல்படும் துறவற சபையினர் கல்வி கற்கின்ற, மற்றும் நடுத்தர வர்க்கத்தைச் சார்ந்தவர்களுக்குத் தமது பணியைக் கைவிட்டுவிடக் கூடாது என துறவற சபைத் தலைவர்களின் ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய வத்திக்கான் தூதுவர் பேரருட்திரு பிரான்சுவா பக்கே குறிப்பிட்டார். பொதுக்கூட்டத்தில் புதிய சிரேஷ்டராக அல்லைப்பிட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட அருட்திரு அலெக்சாண்டர் S S. S. துறவறசபைத் தலைவர்களால் தெரிவுசெய்யப்பட்டார்.



கத்தோலிக்க திருச்சபையின் ஆயர் பேரவைக்கு ஒத்த பேரவையாகிய துறவறசபை சிரேஷ்டர்களின் பேரவையின் புதிய தலைவராக அருள்திரு அலெக்சாண்டர் S S.S. தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மட்டக்குளியிலுள்ள டிலாசால் நவசந்நியாச இல்லத்தில் நவம்பர் 23ஆம் திகதி நடைபெற்ற ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் புதிய தலைவரின் நியமனம் இடம்பெற்றது.

இக்கூட்டத்தின் முதல் பாகத்தில் பங்கு கொண்டு ஆண்டறிக்கையைப்பெற்றுக்கொண்ட வத்திக்கான் தூதுவர் பேரருள்திரு பிரான்சுவா பக்கே அவர்கள் "ஏழைகளுக்குப் பணிபுரிய முனைப்புடன் செயல்படும் துறவற சபையினர், கல்விகற்கின்ற மற்றும் நடுத்தர வர்க்கத்தைச் சார்ந்தவர்களுக்கும் தமது பணியைக்கைவிட்டுவிடக் கூடாது'' என கேட்டுக்கொண்டார். சமூக மேம்பாட்டின் முன்னேற்றத்திலோ, பின்னடைவிலோ பெரிய தாக்கத்தை உண்டுபண்ணுபவர்கள் இந்த படித்த நடுத்தர வர்க்கத்தினரே என்றும் இலங்கைக்கான வத்திக்கான் தூதுவர் சுட்டிக்காட்டினார்.

சென்ற மாதம் 19 ஆம் திகதி யாழ். ஆயர் பேரருள் திரு. வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்கள் வெள்ளி விழாக்காணும் குருக்களுடன் இணைந்து தமது குருத்துவத்தின் பொன்விழாவைக் கொண்டாடியபோது புதிய தலைவராகிய அருள் திரு அலெக்சாண்டர் S. S. S. யாழ். நகருக்கு விஜயம் செய்து வடமாகாண துறவற சபைத் தலைவர்களைச் சந்தித்து அவர்களுடன் ஒரு விசேட கூட்டத்திலும் பங்குபற்றினார்.



## தாஷ்கென்ற் மாவட்டத்துக்கு கொரிய குருக்கள்

சோவியத் குடியரசான உஸ்பெக்கிஷ்தானிலுள்ள தாஷ்கென்ற் மறைவட்டத்தில் பணிபுரிய சில குருத்துவ தொண்டர்களை சோல் மறைவட்ட பேராயரான கருதினால் கிம் அழைத்துள்ளார். தாஷ்கென்ற் பேராயரிடமிருந்து கொரிய குருக்களை அனுப்பும்படி தமக்கு ஒரு வேண்டுகோள் கிடைத்துள்ளதாக அவர் நவம்பர் 18 ஆம் திகதி நடந்த கூட்டத்தில் தெரிவித்தார். தாஷ்கென்றில் பல கொரியர்கள் வாழ்ந்து வருவதாகத் தெரிகிறது.

தென்கொரியாவிலிருந்து மறைப்பணி புரிய ஏற்கெனவே இரு குருக்கள் வெளிநாடு சென்றுள்ளனர் இவர்கள் அயர்லாந்தில் பயிற்சி பெற்ற பின் செனியாவில் பணியாற்றச் செல்வார்கள்.

## பூநகரி-முழங்காவில் பங்கில் ஒளிவிழா

பூநகரி பங்கிலிருந்து இடம்பெயர்ந்து ஜெயபுரம் கிராமத்தில் தங்கிவாழும் பள்ளிக்குடா, பூநகரி பங்கு மக்களும் ஒன்றிணைந்து ஒளிவிழா நிகழ்ச்சிகளை சிறப்பாக மார்கழித் திங்கள் 27ஆம் திகதி கொண்டாடினார்கள். அதே போன்று 26ஆம், 28ஆம், 29ஆம், 30ஆம் திகதிகளில் முறையே நாகபடுவான் புனித வேளாங்கண்ணி, நாச்சிக்குடா புனித வேளாங்கண்ணி, குமுழமுனை புனித அந்தோனியார், நாச்சிக்குடா புனித யாகப்பர் ஆலய பங்குமக்களும் வெகுசிறப்பாகக் கொண்டாடினார்கள். இந்த நிகழ்ச்சிகள் கிறிஸ்து பிறப்பின் தன்மைகளையும் தற்போது கிறிஸ்து யார் என்பதையும் எல்லா மக்களுக்கும் விளங்கப்படுத்தின. அத்துடன் இந்து சமய சூழலிலே இவை மறை அறிவிப்பின் கருவிகளாகவும் அமைந்தன. பெரும்பாலான பங்குகளிலே இந்து சமயத்தைச் சேர்ந்த சிறு பிள்ளைகளும் கலை நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு கிறிஸ்து பிறப்பின் தன்மைகளை உணர்ந்து மகிழ்ந்திருந்தமையும் இங்கு குறிப்பிட தக்கது.

## புதிய மேய்ப்புப்பணி நிலையம்

இலங்கையின் புதிய மறைமாவட்டமான குருநாகலில் புதிய மேய்ப்புப்பணி நிலையமொன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

திறப்பு வைபவத்தின்போது குருநாகல் ஆயர் றேமண்ட் பீரிஸ் அம்மாவட்டத்தில் 3 வீதமானவராயிருக்கும் கத்தோலிக்கர் நீதியும், சமாதானமும் வளர முன்வந்து உழைக்க வேண்டுமெனக் கூறினார்.

புதிய நிலையம் பொதுநிலை அப்போஸ்தல இயக்கங்களை வளர்ப்பதற்கு வேண்டிய வதிவிட வசதிகளைக் கொண்டது. மறைமாவட்டத்தில் பொதுநிலையினரின் மறைப்பணி மறுமலர்ச்சி அடைந்து வருவதாக மறைக்கல்வி இயக்குநர் பிதா சமிலஸ் பெர்னாண்டோ கூறினார்.

புதிய நிலையமானது ஜெர்மன் நிதி நிறுவனமாகிய மிஸியோவினதும், வத்திக்கான் மறைபரப்பு பேராயத்தினதும் நிதியுதவியுடன் அமைக்கப்பட்டதாகும். கேட்போர் கூடம் போன்ற வசதிகளுடன் 60 பேர் தங்கக் கூடிய வதிவிட வசதியும் கொண்டது.

## அரச பயங்கரவாதம் பற்றி விசாரணை செய்க

திரிபுர மாநிலத்தில் நிலவி வரும் பயங்கரவாத நிலை பற்றி விசாரணை செய்யுமாறு திரிபுர சிவில் சுதந்திர சங்கம், சிவில் சுதந்திரத்துக்கான மக்கள் ஒன்றியத்தைக் கேட்டுள்ளது. ஆளும் கட்சி அச்சுறுத்தல் உபாயங்களைக் கையாளுகிறதென்றும் பொலிசார் காடையர்களின் அட்டகாசத்தால் அரசின் சட்டதிட்டங்கள் அங்கு ஒழுங்காக செயற்படுவதில்லை என்றும் சிவில் சுதந்திர சங்கம் முறையிட்டுள்ளது.

தீவைப்பு, கற்பழிப்பு, கொலை கொள்ளை போன்ற குற்றங்கள் அதிகரித்து வருகின்றன. ஆனால் குற்றவாளிகள் எவரும் கைதுசெய்யப்படவில்லை.

திரிபுரவில் கடமையாற்றும் அரச அதிகாரிகள் இத்தகைய அச்சுறுத்தல் காரணமாக சீர்கெட்டுப் போயிருக்கின்றனர். இன்றேல் தக்க காரணமின்றி இடமாற்றம் செய்யப்படுகின்றனர். இத்தகைய சீர்கேடுகளைப் பற்றி விசாரணை செய்யுமாறு சிவில் சுதந்திர சங்கம் கேட்டுள்ளது.

**கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண் விழிப்பது வீண்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்கருத்து

## சமாதான முயற்சியில்......

புதிய ஆண்டில் முதல் இதழை விரிக்கும் பாதுகாவலன் இவ்வாண்டுக்கான திருத்தந்தையின் உலக சமாதான தினச் செய்தியை முழுமையாகப் பிரசுரிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றது.

முழு உலகமுமே ஒரு கிராமமாக கணிக்கப்படுகின்ற இக்கால கட்டத்தில், உலகின் பல்வேறு பாகங்களிலும் போரினால் எழுந்துள்ள அனர்த்தங்களினால் இன்னலுறும் மக்களின் துயர்துடைக்க, அமைதியை மீண்டும் நிலைநாட்ட வழி காண்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படவேண்டும்.

''சமாதானத்தைக் கட்டி எழுப்ப, மதநம்பிக்கையுள்ளோர் ஒன்றுபடல் வேண்டும்'' என்ற தலைப்பில் திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பர் தமது 25வது உலக சமாதான தினச் செய்தியை வெளியிட்டுள்ளார்.

சமாதானத்துக்கான முயற்சியில் மதங்கள் தடைக்கற்களாக இருக்கின்ற தன்மையை எமது நாட்டில் தெளிவாகக் கண்டுகொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

நமது நாட்டில் சமாதானத்துக்கான முயற்சிகளைச் சகல தரப்பினரும் மேற்கொள்வதில் முனைப்பாக ஈடுபட்டுக் கொண்டிருக்கும் இச்சந்தர்ப்பத்தில் மதங்களின் பங்களிப்பு எத்தகையதாயுள்ளது? அரசியல் லாபம் தேடமுற்படுவோரும், பேரினவாத சக்திகளும் மதங்களைத் தமக்குச் சாதகமாகப் பயன் படுத்த முற்படுகின்ற தன்மையே தலைதூக்கி நிற்கின்றது.

அன்றாடம் புதினப் பத்திரிகைகளில் மதத்தலைவர்களின் எதிர்ப் பிரசாரங்களைக் காணும்போது வெந்த புண்ணில் வேல்பாய்ந்த உணர்வு மக்களை வாட்டுவதைக் காணுகிறோம்.

சமயம் சமாதானத்துக்கு அளிக்கும் உண்மையான பங்களிப்பு நம்மத்தியிலே வெளிக்காட்டப்பட வேண்டும். சமாதானம் என்னும் குறிக்கோளை அடைவதற்குச் சமயங்கள் துணைபுரிய வேண்டும். இதனையே திருத்தந்தை தம் செய்தியில் வலியுறுத்தியுள்ளார்.

நேர்மையான உள்ளத்தோடு சமாதானத்தைத் தேடுவோரை இந்த முக்கிய விடயத்தைப்பற்றித் தம்மோடு சிந்திக்கும்படி அழைப்பு விடுக்கிறார் நம் திருத்தந்தை.

இறைவனுடைய கொடையாக நமக்குத்தரப்படும் சமாதானத்துக்காக சகல மதத்தவர்களும் செபிப்பதோடு, உருப்படியான செயற்பாடுகள் மூலம் அதற்காக உழைக்க வேண்டும் என்பதே அவரது செய்தியின் சாரமாகும்.

உலக வரலாற்றில் திருத்தந்தை 2ஆம் அருள் சின்னப்பரின் காலம் தனிஇடம் பெற்றுவிட்டது. கொம்யூனிச நாடான போலந்திலிருந்து திருச்சபையின் தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்ட திருத்தந்தை அவர்கள் தமது காலப்பகுதியில் சோவியத்ஒன்றியத்தின் அஸ்தமனத்தைக் காணும் பேறுபெற்றார். அவரது சொந்த நாடான போலந்திலேயே முதன் முதல் கொம்யூனிசத்தின் வீழ்ச்சி ஏற்பட்டது.

சோவியத்துக்கு எதிராக அணிதிரட்டப்பட்ட நேட்டோவில் சோவியத் குடியரசில் இருந்த நாடுகளே இணைந்துகொள்ளும் அளவுக்கு வரலாறு மாற்றம் கண்டுள்ளமை அண்மைக்கால முன்னேற்றமாகும்.

உலக சமாதானம் பற்றிப் பேச்சளவில் நின்றுவிடாது, செயல்வடிவம் கொடுத்து வரும் திருத்தந்தையைப்போல எல்லா மதத்தலைவர்களும் சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகிய பண்புகள் நிலைபெற உழைக்கவேண்டும்.

குறுகிய மனப்பான்மையுடன் கிணற்றுத் தவளைகளாக சிறிய வட்டத்தில் வாழ்ந்து கொண்டு, உலகம் எம்மைப் பற்றிக் கொண்டிருக்கும் அபிப்பிராயங்களை உதாசீனம் செய்து வாழாமல் கண்களை அகலத்திறந்து, சமாதானத்துக்காக உழைப்போம்; சமாதானத்தின் கருவிகளாக செயல்படுவோம்.

# 25வது உலக சமாதான தினத்தையொட்டி

## பரிசுத்த தந்தை 2ஆம் அருள் சின்னப்பர் விடுத்த

# சமாதானச் செய்தி

**1 ஜனவரி 1992**

## 1. சமாதானத்தைக் கட்டியெழுப்புவதில் ஒன்றுபட்ட விசுவாசிகள்

வழக்கம்] போல, (அடுத்த) ஜனவரி 1 ஆம் திகதியன்று வருடாந்த உலக சமாதான தினம் கொண்டாடப்படும். அன்று இத்திருநாள் ஆரம்பித்து 25 ஆண்டுகள் நிறைவு பெறும். இந்த வருடாந்த தினத்தின் போது, அன்பிற்கும் வணக்கத்திற்குமுரிய எனது முன்னோராகிய ஆறாம் சின்னப்பரை மங்காத ஆர்வத்துடனும் நன்றியுணர்ச்சியுடனும் நினைவுகூருவது இயல்பே.[?] அவரது கூரிய மேய்ப்பு, ஆசிரியவியல் நுண்ணோக்கானது மனுக்குலத்தின் இந்த ''முதன்மையான நன்மையை''க் குறித்து சிந்திக்கும் பொருட்டு சமாதானத்தின் உண்மை நண்பர்கள் எல்லோரையும் ஒன்று சேருமாறு அழைக்கும்படி தூண்டியது.

ஆனால், கால் நூற்றாண்டுக்குப்பின்னர் இக்காலப்பகுதி முழுவதையும் பின்னோக்கிப் பார்ப்பதும் இயல்பானதே. உலகில் சமாதானக் குறிக்கோள் உண்மையில் முன்னேற்றமடைந்துள்ளதா, இல்லையா அல்லது அண்மைக் காலத்தில் நடந்த அவல நிகழ்வுகளால் அவற்றுட் சில வருந்தத்தக்க விதத்தில் இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. மனிதனின் பகுத்தறிவு நாசகரமான சுயநலத்தினாலோ மாறாத பகையினாலோ ஆட்கொள்ளப்படும் ஆபத்து எந்த அளவுக்கு உண்மையாக இருக்கிறது என்பதைக் காட்டக் கூடிய விதமாக கணிசமான அளவு பின்னடைவை ஏற்படுத்தியுள்ளனவா என்பதை ஆராய்வதே இவ்வாறு பின்னோக்கிப் பார்ப்பதன் நோக்கமாகும். அதே வேளையில், படிப்படியாக புதிய ஜனநாயகங்கள் எழுச்சியுற்றமை பல இன மக்களுக்கு மீண்டும் நம்பிக்கையை ஏற்படுத்தி, நீண்ட காலமாகக் காத்திருந்த சமாதான சகாப்தத்தை சாத்தியமாக்கியுள்ளது.

ஒளியும் நிழலும் கொண்ட இந்தப் பின்னணியில், ஒரு முன்னேற்ற அறிக்கையையோ, தீர்ப்பையோ அளிப்பது இந்த வருடாந்தச் செய்தியின் நோக்கமல்ல. மாறாக இன்றைய மனித வாழ்வின் நிகழ்வுகளை ஓர் அறமுறையான சமயப் பாங்கான காட்சியாக உயர்த்தும்பொருட்டு அவற்றைச் சிந்தித்துப்பார்க்கும்படியாக சகோதர பாவத்துடன் ஓர் அழைப்பை விடுக்கின்றது. இக்காட்சியின்படி முதலில் வாழ வேண்டியவர்கள் விசுவாசிகளே. தமது விசுவாசத்தின் காரணமாகவே, சமாதானத்தின் தூதுவர்களாகவும், சிற்பிகளாகவும் இருக்கும்படியாக, தனி நபர்களாகவும் குழுவாகவும் விசுவாசிகள் அழைக்கப்பட்டுள்ளனர். சுருங்கியதாகத் தோன்றும் இவ்வுலகில், பாதுகாப்பு, சுதந்திரம், ஒருமைப்பாடு, பங்குரிமை ஆகியவற்றில் அனைவரும் பொதுவாகக் கொண்டுள்ள பேரவாவுக்கு தாழ்ச்சியுடனும் விடாமுயற்சியுடனும் பொருத்தமான விடைகாண ஏனையோரைப் போலவே, அவர்களை விட இன்னும் கூடிய விதத்தில் இவர்கள் அழைக்கப்பட்டுள்ளார்கள். சமாதானத்துக்கு தம்மை அர்ப்பணிப்பது நன்மனமுடைய ஒவ்வொருவரையும் சார்ந்ததே; ஆகையினாற்றான் இது பற்றிய செய்திகள் அனைத்தும் மனுக்குலத்தவர்கள் எல்லோருக்குமே விடுக்கப்பட்டுள்ளன. ஆயினும், இறைநம்பிக்கையுள்ள அனைவர் மீதும், அதைவிடக் கூடுதலாக ''சமாதானத்தின் அரசரை'' தமது வழிகாட்டியாகவும், தலைவராகவும் கொண்டுள்ள கிறிஸ்தவர்மீது சுமத்தபபட்டுள்ள கடமையாகும்.

## 2. சமாதானத்தின் சமய, அறமுறை இயல்பு

சமாதானத்தின்மீதுள்ள அவா மனித சுபாவத்தில் ஆழமாக வேரூன்றியிருப்பதுடன், பல்வேறு மதங்களிலும் காணப்படுகிறது. இது அமைதியிலும் ஒழுங்கிலுமுள்ள விருப்பாகவும், பிறருக்கு உதவிபுரியும் மனப்பாங்காகவும், பரஸ்பர மதிப்பின் அடிப்படையில் அமைந்த கூட்டுறவு, பகிர்தலாகவும் வெளிப்படுகிறது. இயற்கைவிதியிலிருந்து பிறந்து, உலக மதங்களினால் எடுத்துரைக்கப்படும் இந்த மதிப்பீடுகள் விருத்தியடையவேண்டுமாகில் அதற்கு அரசியல்வாதிகள், சர்வதேச நிறுவனங்களின் தலைவர்கள், வர்த்தகர், தொழிலாளர் சங்கங்கள், தனிப்பட்ட குடிமக்கள் அனைவரது ஆதரவும் தேவை. நாம் கூறுவது ஒவ்வொருவர் மீதும், குறிப்பாக ஒரு விசுவாசியின் மீது சுமத்தப்பட்டுள்ள கடமையாகும். சமாதானத்துக்குச் சான்றுபகர்வதும் சமாதானத்துக்காக உழைப்பதும் செபிப்பதும் ஒரு நல்ல மத ஒழுகலாற்றின் இயல்பான அம்சங்களாகும்.

பல்வேறு சமயங்களின் புனித நூல்களில் மனித வாழ்வையும் மனிதன் இறைவனுடன் கொண்டுள்ள உறவையும் பற்றிக் கூறுமிடத்து சமாதானத்தைப் பற்றிய குறிப்புகளுக்கு முக்கிய இடம் அளிக்கப்பட்டிருப்பது ஏன் என்பது இதனால் விளங்குகிறது. உதாரணமாக ''துன்பத்தின் எண்ணங்களை அல்லாது சமாதானத்தின் எண்ணங்களையே'' (எரேமி. 29:11) கொண்டுள்ள இறைவனது திருமகனாகிய இயேசுக்கிறிஸ்துவே ''எமது சமாதானம்'' (எபே. 2:14) என்பது கிறிஸ்தவர்களாகிய எமது விசுவாசம். எமது யூத சகோதரர்களுக்கோ ''ஷலோம்'' என்னும் வார்த்தை, மனிதன் தன்னோடும், இயற்கையோடும், இறைவனோடும் இசைவுற்றிருக்கும் நிலையில் ஒரு வாழ்த்தையும், ஆசீர்வாதத்தையும் வெளிப்படுத்தும் சொல்லாகும். இஸ்லாத்தைப் பின் பற்றுபவருக்கோவெனில் 'சலாம்'' என்னும் சொல் மிக முக்கியமானது, ஏனெனில் அது இறைவனின் மகிமைமிக்க நாமங்களில் ஒன்றாக அமைந்துள்ளது. சமய வாழ்வு, அது உண்மையாகவே வாழப்பட்டால் சமாதான, சகோதரத்துவ பலன்களை அளிக்காதிருக்க முடியாது. ஏனெனில் இறைவனோடு நெருங்கிய ஒரு பிணைப்பை ஏற்படுத்துவதும், மக்களிடையே மேன் மேலும் சகோதர உறவை வளர்ப்பதும் சமய வாழ்வின் இயல்பாகும்.

## 3. அசிசியின் மனப்பான்மையை மீண்டும் எழுப்புதல்

இந்த மதிப்பீடு பற்றிய கருத்தொற்றுமையை நன்குணர்ந்தே, ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர், அசிசிநகரில் நடைபெறும் சமாதானத்திற்கான ஒரு விசேட செபக்கூட்டத்திற்கு கிறிஸ்தவ திருச்சபைகளின் தலைவர்களையும் உலகின் பிரதான மதங்களின் தலைவர்களையும் அழைத்திருந்தேன். குறிப்பிடத்தக்க அந்த நிகழ்ச்சி பற்றிய நினைவே அதே கருத்துக்காக சமய நம்பிக்கையுள்ளவர்களின் ஒருமைப்பாடு பற்றிய கருத்தை மீண்டும் முன்வைக்கத் தூண்டியது.

அசிசிநகரிலே வெவ்வேறு கண்டங்களிலிருந்து வந்த பிரதான சமயங்களின் தலைவர்கள் ஒன்று கூடியிருந்தனர். அக்கூட்டமானது சமாதானத்தின் அனைத்துலகப் பரிமாணத்துக்கு கண்கூடான ஒரு சான்றாக இருந்தது. சமாதானமானது திறமையான அரசியல்,

(தொடர்ச்சி 4ஆம் பக்கம்)

வீட்டுக்கொரு பாதுகாவலன் [illegible] நடைமுறைப்படுத்துங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பொங்குக பொங்கல்

பாரேத்தும் புகழ் மிக்கெம்
ஈழமக்கள்
படுந்துயரம் நீங்கி வாழ்வில்
அமைதி கூர
சீரேந்தும் சிறப்புற்றெம்
ஈழ மண்ணும்
சிறக்கும் நிலை வருகவென்று
பொங்குக பொங்கல்!

நா. விமலாம்பிகை
யாழ். சின்னக்கடை வீதி

இளைஞர் உலகம்

## எங்கிருந்து பேசுகிறாய் எம்பரனே?

பட்டினியால் வருந்தும்,
பந்தமிகு ஏழையின்
ஒட்டிய உதரத்தின்
உள்ளிருந்தோ அன்றி!
கட்டி அணைக்கின்ற
காதலர் மொழிகளிலோ?
செட்டியராக ஐயா
எங்கிருந்து பேசுகிறாய்!

காலையில் மலர்ந்திடும்
கமல மலர்களிலோ?
மாலையில் மதிமயங்கும்
மாண்புறு மலர்களிலோ?
சாலையில் ஓங்கி நின்று
சாய்ந்தாடும் மரங்களிலோ?
நாலையும் அறிந்தவனே
எங்கிருந்து பேசுகிறாய்!

ஆமி தானடிக்கும்
அச்சம் தரும் ஷெல்களிலோ?
மாமியாரை இடித்துரைக்கும்
மருமகளின் உரையதிலோ?
பூமி தனையாளும்
புருஷர்களின் மொழியதிலோ?
காமி இறைவா நீ
எங்கிருந்து பேசுகிறாய்!

பொங்கும் கடலதிலோ?
பொழிகின்ற மழையதிலோ?
தங்க இடமின்றித்
தவிக்கின்ற தமிழரிலோ
தங்கத்தமிழீழ
தரணிபுகழ் எம்மண்ணில்
எங்கிருந்து பேசுகிறாய்
எம்பரனே கூறிடுவாய்?

— ஷா —

## குருசு முத்தண்ணையின் கிசு கிசு - 71

குருசுமுத்தண்ணை : என்னடி பிள்ள அன்னம்! இந்த விறகு கொத்தி, தண்ணி இறைச்சு கஸ்டப்படுறியே, ஏன் உன்ர பெடி பெட்டை எல்லாம் எங்க? அதுகளை கொண்டு செய்தா என்ன?

அன்னம் : வெளிய போற்றுதுகள். அதுகள் வாறத்துக்கிடையில சமைக்க வேணும் அண்ணே.

குருசு : ஞாயிற்றுக்கிழமை, எங்க கோயில் குளத்துக்கு போற்றுதுகளோ?

அன்னம் : கோயிலுக்கு போக நேரம் ஏது அண்ணே? சோதினை வருகுது. ரீயூசனுக்கு போற்றுதுகள்.

குருசு : இவையள் படிச்சுட்டு என்ன செய்யப் போகினம். வாழ்க்கைக்கு உதவாத படிப்பு படிச்சு உன்னை எல்லோ மாடா உழைக்க வைக்குதுகள்.

அன்னம் : அதுதான் அண்ணே! படிச்சு முடிய வெளியால அனுப்பத்தான் யோசிக்கிறேன்.

குருசு : அட அப்ப நல்லா குடு சாப்பாட்டை. பண்டி வளப்பு மாதிரித்தான் இப்ப பிள்ளை வளப்பும் போல. ஏற்றுமதி பொருளாப் போச்சு பாரன்.

## ஆனந்தம்

யேசு வருகை காணவே
மேகக்கூட்டம் அலையுது.

நிலவும் ஒளியை சிந்தியே
அவரைக் காணத் துடிக்குது.

மீட்பர் பிறந்த செய்தியை
கேட்ட அந்த தென்றலும்

தேடி ஆடி ஓடியே
அவரைத் தழுவிக் கொள்ளுது.

பாலனது புன்னகையும்
குடிலில் நிரம்பி வழியுது.

அந்தக் காட்சி அன்னைக்குத்
தான்
ஆனந்தமாய் இருக்குது.

செல்வன்.
இ. ஜேம்ஸ் பத்திநாதன்
வலையன்மடம், முல்லைத்தீவு.

### 2ஆம் வருட நினைவு அஞ்சலி



திருமதி ஜெனோவா (இந்திரா) தவராஜா

| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 08-01-1954 | 08-01-1990 |

ஆண்டு இரண்டு மறைந்தாலும் அணையவில்லை உன் நாமம் பாசத்தின் ஒளிச்சுடரே, பாங்கான என் செல்வமகளே இந்திராணி, எல்லாவற்றிக்கும் முன்னாடி நின்றாயே. முன்னுக்கே போய் விட்டாயே. பாவி உன் அன்னையையும், உனது பச்சிளம் பாலரையும் பாசமிகு சகோதரரையும் பரதவிக்க விட்டுப் பரகதி சென்று விட்டாயே.

பிரிவால் வாடும்
தாயார், சகோதரர், உறவினர்
சில்லாலை மேற்கு
பண்டத்தரிப்பு.

A/1/92

### ஓராண்டு நினைவாஞ்சலி

15-11-01 அன்று. மறைந்த S. B. பிரான்சிஸ் அவர்களினது முதலாண்டு (15-11-90) நினைவாக தோப்பு புனித பிலிப் நேரியார் ஆலயத்தில் இரங்கற் திருப்பலிப்பூசை ஒப்புக்கொடுக்கப்பட்டது.

இவர் நாராஹேன்பிட்டிய பொலிஸ் போக்குவரத்து பிரிவில் சேவையாற்றினார்.

இவர் பிரிவில் துயறுரும்
மனைவி

## காவலன் கண்மணிகள்

| | | |
| --- | --- | --- |
| ஒளி: | 6 | எம் விழிகளின் ஒளி யேசு |
| சுடர்: | 1 | எம் வாழ்வின் வழி யேசு |

என்னகம் : 1

காலையில் கடவுளை வணங்கி
வரும் பொழுதையும் அவர் கரம் கொடுத்து
சில நேரம் தினம் பயின்று
அன்புடன் என்றும் வாழ்வீர்.

கனிவுடன் கதைகள் பல பேசி
உண்மையை என்றும் போற்றி
மனதைத் தூயதாக வைத்து
பணிதனை செம்மையாகச் செய்து
கண்ணியம் தனைக் காத்து வாழும் உங்களுக்கு
உள்ளம் கனிந்த
புத்துயிர் தரும்
துயரைப் போக்கும்
வல்லமை மிக்க
திருவருளில்
புடமிட்ட
அன்பு விழியின்
அன்பு வாழ்த்துக்கள்
என்றும் உரித்தாகுக!

★

## வழிகாட்டும் ஒளி

பகலில் ஒளி பகலவன்.
இரவில் ஒளி மின்னிடும் விண்மீன்கள்.
கடலில் ஒளி கலங்கரை விளக்கு
வையத்தின் ஒளி அறிவுள்ள மனிதன்
அவன் அகத்திற்கு ஒளி இணையில்லா இறைவன்
இவ்வொளியே இயேசு — இவரே
வழிகாட்டும் ஒளி.
இவர் வழி சென்று
அன்புடன் வாழ்வோம்.
அகிலத்தை வெல்வோம்.

அன்பு விழி.

★

## யார் இவர்?

நெஸ்டோரியஸ் என்ற பதிதன் யேசுவின் மனித சுபாவத்தைப் பொறுத்த அளவில் மாத்திரமே இவர் உறவு உரிமையுடையது என்றான். கி. பி. 431 இல் எபேசு நகரில் கூடிய பொதுச் சங்கம் இத்தப்பறையைக் கண்டனம் செய்து, தேவ மகனின் உறவு உரிமையுடையது எனக்கூறியது. அலெக்சாண்டிரியா நகரின் ஆயரார்யிருந்து புனித சிரில் நெஸ்டோரியசின் தப்பறையை ஐயந்திரிபறச் சுட்டிக்காட்டினார். ''இயேசுவின்...'' என்ற சொல் பல முறை அருளப்பரின் நற்செய்தியில் காணக்கிடக்கிறது.

ஆண்டின் முதலாம் நாள் நினைவு கூரப்படும் இவர் யார்?

✶

## வாரீர்!

இயற்கை என்றொரு இன்பவனத்தில்
இறைவனைக் கண்டு ரசிக்கலாம் — எனவே
இயற்கையின் வடிவில் ஊற்றெடுக்கும் — எம்
இதயம் கனிந்த நன்றிக்கரத்தை
இறைவனுக்குச் செலுத்த விரைந்து வாரீர்!

படைப்பு என்றொரு பாகத்திலே — தன்
அன்பு என்றொரு வட்டத்திலே
மேன்மை உள்ளவனாக எம்மைப் படைத்திட்டான்.
ஆகவே பண்ணிசைத்து எம் நன்றிக்கரத்தை
படைத்திட விரைந்து வாரீர்!

இந்த இப்பாரினிலே — என்றும்
இன்பமுடன் பிறந்துவாழ்ந்துவரும் — என்
இனியநல் இன்பநெஞ்சங்களே
இனியநல் இயேசுவுக்கு — எம்
நன்றிக்கரம்கூப்ப விரைந்து வாரீர்!

பி. ரஞ்சித் ரூஸ்வேல்ட்
அ. எ. 81

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 25வது உலக சமாதான....

## அசிசியின் மனப்பான்மையை...

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

இராஜதந்திரப் பேச்சுவார்த்தைகளாலோ, பொருளாதார நலன்களுக்கிடையே செய்து கொள்ளப்படும் சமரச இணக்கத்தினாலோ மட்டும் ஏற்படுவதல்ல, மனித உள்ளங்களை அறிந்து, மனுக்குலத்தோர் அனைவரையும் வழிநடத்தி வரும் ஒருவரில் அது அடிப்படையாகத் தங்கியுள்ளது என்பதை அக்கூட்டம் உறுதிப்படுத்தியது மனுக்குலத்தின் வருங்காலத்தைப் பற்றி கரிசனை கொண்டவர்களாகிய நாம் ஒன்றாக உபவாசமிருந்தோம். அதன் மூலம் உலகில் பசிபட்டினியினால் வருந்தும் இலட்சக்கணக்கான மக்களிடம் எமக்கிருந்த கருணையையும் கூட்டொருமைப்பாட்டையும் வெளிப்படுத்துவதே எமது கருத்தாகும். மனிதவரலாற்றின் நிகழ்வுகள் பற்றிக் கரிசனை கொண்டிருந்த விசுவாசிகளாகிய நாம் ஒன்றாக யாத்திரை சென்றோம் அவ்வேளையில் எமது பொதுவான தோற்றுவாய் பற்றியும், எமது பொதுவான இறுதிக்கதி பற்றியும், எமது குறைபாடுகள், பொறுப்புகள் பற்றியும், தமது தேவைகளில் எமது உதவியை எதிர்பார்க்கும் எமது சகோதர சகோதரிகளின் செபங்கள், எதிர்பார்ப்புகள் பற்றியும் மௌனமாகத் தியானித்தோம்.

அன்று நாம் செபித்து, உலகில் சமாதானத்தின் மீது எமக்குள்ள உறுதியான கடப்பாட்டை வெளிப்படையாகக் காட்டினோம். நாம் இப்போதும் அதனைத் தொடர வேண்டும். நாம் அசிசியின் உண்மையான மனப்பான்மையைப் பேணவேண்டும்; கொள்கைப் பற்றும் விசுவாசமுள்ளவராக இருக்க வேண்டிய கடமைக்காக மட்டுமல்ல, வருங்கால சந்ததிகளுக்கு நம்பிக்கை கொள்ள ஓர் ஆதாரத்தை அளிக்கும்படியாகவும் நாம் இதைச் செய்யவேண்டும். அசிசியின் ஏழை மனிதர் என்று அழைக்கப்படும் புனித பிரான்ஸிஸ் வாழ்ந்த நகரிலே நாம் ஆரம்பித்த பொதுவான யாத்திரை இப்போது தொடர வேண்டும். அதே சமயத்தில், ஆன்மீக அடித்தளத்தின் மீது கட்டியெழுப்பப்பட்ட நிலையான சமாதானத்திற்கான பிற வழிகளையும் புதிய வழிவகைகளையும் தேடுவதை விட்டுவிடலாகாது என்பதும் தெளிவு.

### 4. செபத்தின் வல்லமை

உலகமனது இறுதியில் சமாதானத்தின் இருப்பிடமாக ஆகவேண்டுமாகில் மனித வகை துறைவளங்களை நாடிச் செல்வதற்கு முன், காழ்ச்சியும், நம்பிக்கையும் விடாமுயற்சியும் கொண்ட ஆழ்ந்த செபத்தின் அவசியத்தை நான் இங்கு வற்புறுத்த விரும்புகிறேன். அந்தச் சமாதானத்தை வேண்டிப் பெற்றுக்கொள்வதற்கு தேவைப்படும் அதிமேலான சக்தி செபமேயாகும். இந்த நன்மையின் மேல் விருப்பங்கொண்டு. தாம் வாழும் பல்வேறு சூழல்களில், தமக்குச் சாத்தியமாக வழிமுறைகளில் அதைப் பேணி வளர்ப்பதற்கு ஆவலாக உள்ளவர்கள் அனைவருக்கும் செபம் துணிவையும் உதவியையும் அளிக்கின்றது. அதி உன்னத இறைவனைச் சந்திப்பதற்கு மட்டும், செபம் எமக்கு வழிசெய்வதில்லை; அது எம் அயலவரை சந்திப்பதற்கும் எம்மைப்பக்குவப்படுத்துகிறது; எவ்வித வேறுபாடுமின்றி ஒவ்வொருவருடனும் அன்பும், மதிப்பும், புரிந்துணர்வும், கண்ணியமும் பொருந்திய உறவுகளை ஏற்படுத்த எமக்கு உதவுகின்றது

இறையுணர்வும், செபமனப்பான்மையும் நாம் உளர வளர்ச்சியடைவதற்குத்துணை புரிகின்றன அத்துடன் நாம் உலகில் இருப்பதன் உண்மையான அர்த்தத்தை நாம் உணரச் செய்கின்றன. இந்த சமயப் பரிமாணமானது அமைதி ஆட்சிசெலுத்தும் ஓர் ஒழுங்கான சமுதாயத்தைக் கட்டியெழுப்புவதில் ஈடுபாட்டுடன் பங்களிப்புச் செய்வதற்கு எம்மைத் தூண்டுகிறது என்றும் சொல்லலாம்.

செபமே எம்மை மிகவும் சிறந்த விதத்தில் ஐக்கியப்படுத்தும் பிணைப்பாகும். உயர்வு தாழ்வுகள், தப்பெண்ணங்கள், கசப்பு வெறுப்புகளுக்கு அப்பாற்பட்ட ஒரு மட்டத்தில், அதாவது அனைவருக்கும் ஆண்டவரும் தந்தையுமான இறைவனின் முன்னிலையில், விசுவாசிகள் ஒருவர் ஒருவரைச் சந்திப்பது செபத்தின் மூலமே இறைவனோடும் பிறரோடும் இருக்க வேண்டிய சரியான உறவின் உண்மையான வெளிப்பாடாக செபம் இருப்பதால், அது ஏற்கெனவே சமாதானத்துக்கு ஆக்கமுறையான ஒரு பங்களிப்பாக இருக்கிறது.

### 5. கிறிஸ்தவ ஒன்றிப்பு உரையாடலும் மதங்களுக்கிடையிலான உறவுகளும்

செபம் தனித்து நிற்கமுடியாது. பிறகண்கூடான செயல்களுடன் அது இணைந்திருப்பது அவசியமாகும் சமாதானத்தை அடைவதற்கு ஆற்ற வேண்டிய செயல்களைப் பற்றியும், பின்பற்ற வேண்டிய வழிகள் பற்றியும் ஒவ்வொரு மதத்திற்கும் தனிப்பட்ட பாங்குகள் உள்ளன. கத்தோலிக்க திருச்சபையானது தனது சொந்த தனித்துவத்தையும், போதனையையும், முழு மனுக்குலத்தை மீட்கும் தனது பணியையும் தெளிவாக வலியுறுத்திக் கூறுகின்ற அதே வேளையில், பிறமதங்களிலுள்ள "உண்மையானதும் புனிதமானதுமான எதையும் உதறித்தள்ளுவதில்லை. தன்னுடைய கொள்கைகளிலிருந்து பலவற்றில் மாறுபடினும், மக்கள் யாவருக்கும் உள்ளொளி ஊட்டும் உண்மையின் ஒளிச்சுடரைப் பலகாலும் காட்டும் வாழ்க்கை நடைமுறை வழிகளையும் கட்டங்களையும் கோட்பாடுகளையும் திருச்சபை உண்மையாகவே மதிக்கிறது . (கிறிஸ்தவமல்லா மறைகளோடு திருச்சபைக்குள்ள உறவு 2)

வேறுபாடுகளை அலட்சியம் செய்யாத அல்லது குறைத்துக் காட்டாத போதிலும், சமாதானத்தைப் பேணும்போது பலனுள்ள விதத்தில் விருத்தி செய்யப்பட்டு பிறமதங்களையும் சமயக் கோட்பாடுகளையும் பின்பற்றுவோருடன் சேர்ந்து நடைமுறைப்படுத்தக் கூடிய சில கூறுகள் அல்லது அம்சங்கள் உள்ளன. மதங்களுக்கிடையிலான சந்திப்புகளும், தனிச்சிறப்புடைய விதத்தில் கிறிஸ்தவ சபைகளுடனான உரையாடலும் இதற்கு இட்டுச்செல்லும். இந்த விதமான சந்திப்புகள், பரிமாற்றங்களின் பயனாக, முழு மனுக்குலத்தினதும் உண்மையான நன்மையைப் பொறுத்தமட்டில் தமக்குள்ள பெரும் பொறுப்புக்களை பல்வேறு சமயங்கள் தெளிவாக உணரமுடிந்தது. இன்று இவை எல்லாம் தனிப்பட்ட பிரிவினரின் நலனுக்காகவோ அரசியல் நோக்கங்களுக்காகவோ தம்மைப் பிறர் பயன்படுத்தக் கூடாது என்பதில் உறுதியாய் இருப்பதாகத் தோன்றுகிறது. உலக மக்கள் சமூகத்தின் சமூக கலாசார புறவாய்மைகளை உருவாக்குவதில் உணர்வு விழிப்புடைய, தீர்மானமான ஒரு நிலையை வகிக்கத் தொடங்கியுள்ளன. இது அவைகள் முன்னேற்றப்பாதையில் செயலுரமிக்க ஒரு சக்தியாக இருக்க வழிசெய்கிறது. இதனால் அது மனுக்குலத்துக்கு நிச்சயமான ஒரு நம்பிக்கையை அளிக்கின்றது. பல சந்தர்ப்பங்களில் இவற்றின் செயற்பாடுகள் ஒன்றுசேர்ந்தும் ஒத்திசைவாகவும் நிறைவேற்றப்பட்டிருந்தால் இன்னும் பலனுள்ளதாக இருந்திருக்கும் என்பது தெளிவாகியுள்ளது. இறை நம்பிக்கையுள்ளவர்களிடத்தில் இத்தகைய ஒரு செயல்முறை இருக்குமானால், பல்வேறு மக்களினங்கள் மத்தியில் சமாதானத்தைப் பேணி வளர்ப்பதிலும், மண்டலங்கள், வலயங்களுக்கிடையிலுள்ள பிளவுகளை சீர்ப்படுத்துவதிலும் அது நிச்சயமான பலனை அளிக்கக் கூடியதாயிருக்கும்.

### 6. செல்லும் வழி

சமாதானத்தின் பொருட்டு செயலுரமுள்ள ஒத்துழைப்பு என்னும் இந்த இலக்கை அடைவதற்கு இன்னும் வெகுதூரம் செல்லவேண்டும். இன்று சமூக தொடர்பு சாதனங்கள் அடைந்துள்ள வளர்ச்சியின் துணைபெற்ற பரஸ்பர அறிவு என்னும் பாதை உண்டு பரந்த மனந்திறந்த உரையாடல் அதனை எளிதாக்குகின்றது. பெருந்தன்மையான மன்னிப்பு, சகோதர ஒப்புரவு, உடனுழைப்பு என்னும் பாதை உண்டு மட்டுப்படுத்தப்பட்ட அல்லது முதன்மை குறைந்த விடயங்களிலாயினும் அதே நோக்கத்துக்காக இந்த உடனுழைப்பு இருக்குமானால், இறுதியாக ஒரே இலக்கை அடைவதற்காக முயற்சிகளிலும் தியாகங்களிலும் பங்கு கொள்ளும் நாளாந்த சகவாழ்வு என்னும் பாதை உண்டு. சிலவேளை இந்தப் பாதையில் தான் மதநம்பிக்கை கொண்ட தனிப்பட்ட விசுவாசிகள், தமது தலைவர்களை விட அதிகமாக கடினமான உழைப்பை எதிர்நோக்கவேண்டியுள்ளது. அதே வேளையில் ஒன்றாக சமாதானத்தைக் கட்டியெழுப்பும் திருப்தியும் அவர்களுக்குண்டு. பல நூற்றாண்டுகாலமாக ஏற்படுத்தப்பட்ட வேதனை தரும் காயங்கள் மீண்டும் ஏற்படாதிருக்கவும், இன்னும் இருந்து வரும் காயங்கள் விரைவில் ஆறவும் மதங்களுக்கிடையிலான தொடர்புகளும், கிறிஸ்தவ ஒன்றிப்பு உரையாடல்களும் தற்போது கட்டாயபாதைகளாகத் தோன்றுகின்றன. எல்லாவற்றிற்கும் மேலாக, தமது உள்ளார்ந்த மனப்பாங்கின் சொந்த முன்மாதிரியால் விசுவாசிகள் சமாதானத்திற்காக உழைக்கவேண்டும். இந்த மனப்பாங்கு ஏற்ற நடத்தையாகவும், செயல்களாகவும் வெளிப்படவேண்டும். சாந்தம், சமநிலை, தன்னடக்கம், புரிந்துணர்வுச் செயல்கள், மன்னிப்பு, பெருந்தன்மை, இவையனைத்தும் மக்கள் சூழலிலும், சமய, பொதுவாழ்வுச் சமுதாயங்களிலும் சமாதானத்தை ஏற்படுத்தும் சக்தியாக விளங்குகின்றன.

இக்காரணத்தினாற்றான், அடுத்த உலக சமாதான தினத்தன்று, சமாதானத்தின் கடவுளது குரலைச் செவிமடுக்க ஆயத்தமாக இருக்கும்படிக்கும் புதிய நம்பிக்கையுடன் இம்மாபெரும் பணிக்குத் தம்மை அர்ப்பணிக்கும்படியும் ஒரு கருத்தூன்றிய ஆத்தும சோதனை செய்யுமாறு சகல விசுவாசிகளையும் அழைக்கின்றேன், அவர்களும் நல்ல மனதுடைய சகல மக்களும் இன்றைய காத்திரமான நிலைமைக்கேற்ப, மிகுந்த வற்புறுத்தலுடன் நான் மீண்டும் விடுக்கும் இந்த அழைப்புக்கு பதிலிறுப்பாளர்கள் என்பது எனது நம்பிக்கையாகும்.

## விண்ணக வாழ்வின் 90வது. நினைவஞ்சலி



அமரர் வஸ்தியாம்பிள்ளை
எதிர்மன்னசிங்கம்
மலர்வு 1963–12–04
உதிர்வு 1991–10–12



அமரர் யேசுதாசன்
போல்ராஜ்
மலர்வு 1970–08–15
உதிர்வு 1991–10–12

12-10-1991 அன்று, கிளாலிக் கடலில் சிறிலங்கா உலங்கு வானூர்தித் தாக்குதலால் அகால மரணமான இவர்கள் "சமாதானத்தில் இளைப்பாறுவார்களாக."

துயருறும்
அன்பு மனைவி, மக்களும்,
பெற்றோர், சகோதரர்களும், உறவினர்களும்.

கிளாலி, எழுதுமட்டுவாள். A/54/91

இப்பத்திரிகை திரு நீக்கிலஸ் யேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக யாழ்ப்பாணம், புனித வளன் கத்தோலிக்க அச்சகத்தில் 1992 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 10 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

இல. QB/1001/58/81

**உன்னை மீட்கவும் விடுவிக்கவும் நாம் உன்னோடிருக்கிறோம் என்கிறார் ஆண்டவர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org